**நிகழும் திருவள்ளுவராண்டு விளம்பி வருடம் 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் தேதி சித்திரை மாதம் 17ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள தாராபுரம் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

----

**1.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக் குத்தகை இனஙகளில் அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள்.19.9.2008 ஆணைக்கிணஙக, 2018–19, 2019–20 மற்றும் 2020–21ம் மூன்றாண்டுகளுக்கு ஏலம்(ம) ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இனஙகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| குத்தகை இன எண் | குத்தகை இனம் | ஒப்பந்ததாரர் பெயர் | 10.04.2018 | | 19.04.2018 | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்டொன்றுக்கு ஒப்பந்தப் புள்ளி தொகை | ஏலம் | ஆண்டொன்றுக்கு ஒப்பந்தப் புள்ளி தொகை | ஏலம் |
| 11 | நகராட்சி பூங்கா வசூல் உரிமம் | திரு.மணி, த.பெ.மாசாணம், 122,தளவாய்பட்டிணம், தாராபுரம். | ரூ.1,95,000 | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.205000 | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| | | திரு.கே.தண்டபாணி, த.பெ.குப்புச்சாமி, 2,ஜவகர்நகர், தாராபுரம். | ரூ.1,90,000 | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.197000 | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| 25 | வார்டுஎண்.9 சந்தைப்பேட்டை (மேற்குப்பகுதி) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | திருமதி.என்.வனிதா, க.பெ.நாகராஜ், 103–9,புதுகோட்டை மேடு, தாராபுரம் | ரூ.17000 | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| | | திரு.வி.தாமோதரன், 115,புதுகோட்டைமேடு, தாராபுரம் | ரூ.16000 | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| 33 | வார்டு எண்.12, உப்புத்துறைப்பாளையம் (பழனி ரோடு) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | திரு.எம்.நாகராஜ், த.பெ.முருகேசன், 52,ஜவகர்நகர், தாராபுரம் | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.45000 | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| | | திரு.சி.தில்லையப்பன், 50, குடித்தெரு, கொளிஞ்சிவாடி, தாராபுரம். | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.22000 | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| 45 | வார்டு எண்.28 குளத்துபுஞ்சை தெரு (பள்ளி அருகில்) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | திரு.எம்.நாகராஜ், த.பெ.முருகேசன், 52,ஜவகர்நகர், தாராபுரம் | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.24500 | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| | | திரு.என்.நாராயணசாமி த.பெ.நாட்ராயன், 18–28,ஜவகர் நகர், தாராபுரம். | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.27000 | ஏலம்கோர எவரும் வர வில்லை |

அலுவலகக்குறிப்பு:

1. குத்தகை இன எண்.11க்கு ஐந்து முறை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஆறாவது மற்றும் ஏழாவது முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திரு.மணி என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,05,000/– ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி இனத்துக்கு 01.04.2018 முதல் துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.193, ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை நாள் ஒன்றுக்கு ரூ.594/– மேலும் நகராட்சியில் பணியாளர் பற்றாக்குறையாக உள்ள காரணத்தாலும், துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகையை விட ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள தொகை கூடுதலாக உள்ளதால் திரு.மணி, ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. குத்தகை இன எண்.25க்கு ஐந்து முறை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஆறாவது முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திருமதி.என்வனிதா ஆண்டு ஒன்றுக்கு ரூ.17000/–க்கு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.
3. குத்தகை இனஎண்.33க்கு ஆறு முறை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஏழாவது முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திரு.எம்.நாகராஜ் ஆண்டு ஒன்றுக்கு ரூ.45000/–க்கு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.
4. குத்தகை இனஎண்.45க்கு ஆறு முறை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஏழாவது முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திரு.என்.நாராயணசாமி ஆண்டு ஒன்றுக்கு ரூ.27000/–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.

**ந.க.எண்.5001/2017/அ3**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக் குத்தகை இனஙகளில் அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள்.19.9.2008 ஆணைக்கிணஙக, 2018–19, 2019–20 மற்றும் 2020–21ம் மூன்றாண்டுகளுக்கு ஏலம்(ம) ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இனஙகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| குத்தகை இன எண் | குத்தகை இனம் | ஒப்பந்ததாரர் பெயர் | 22.03.2018 | | 10.04.2018 | | 19.04.2018 | | 26.04.2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்டொன்றுக்கு ஒப்பந்தப் புள்ளி தொகை | ஏலம் | ஆண்டொன்றுக்கு ஒப்பந்தப் புள்ளி தொகை | ஏலம் | ஆண்டொன்றுக்கு ஒப்பந்தப் புள்ளி தொகை | ஏலம் | ஆண்டொன்றுக்கு ஒப்பந்தப் புள்ளி தொகை | ஏலம் |
| 8 | வாரச்சந்தையில் உள்ள லாரி நிறுத்துமிடத்தில் சுங்க வசூல் | ஆர்.சதாசிவன், தலைவர், லாரி உமையாளர், 62,சோளக்கடை வீதி, தாராபுரம். | ஒப்பந்தப் .புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம் கோர எவரும் வர வில்லை | ரூ.12000 | ஏலம்கோர எவரும் வர வில்லை | – | ஏலம் கோர எவரும் வர வில்லை | ரூ.20000 | ஏலம் கோர எவரும் வர வில்லை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எம்.சண்முகம், 12,லாரிடெர்மினல், ஸ்ரீவிநாயகாலாரி சர்வீஸ், சோளக்கடைவீதி, தாராபுரம். | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம் கோர எவரும் வர வில்லை | ரூ.11800 | ஏலம்கோர எவரும் வர வில்லை | – | ஏலம் கோர எவரும் வர வில்லை | – | ஏலம் கோர எவரும் வர வில்லை |
| 12 | சாலை மர பலன்களை அனுபவிக்கும் உரிமம் நகராட்சி தலைமை தண்ணீர் நிலையத்தில் உள்ள தென்னை மரமகசூல், வளையக்காரதுவக்கப் பள்ளியில் உள்ள மரங்களின் பலன், அண்ணா நகர் குடிநீர் மேல்நிலைதொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரங்களின் பலன் அனுபவிக்கும் உரிமம் | ஜே.மகேஸ்வரன், த.பெ.ஜெயராஜ், 131-1, நேரு நகர், தாராபுரம். | ரூ.4500 | ஏலம் கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| | | சி.துரைசாமி, சந்திரசேகரன், 151,பாரதியார் தெரு, தாராபுரம். | ரூ.6500 | ஏலம் கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை |
| 26 | வார்டுஎண்.9சந்தைப்பேட்டை (கிழக்குப்பகுதி) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | பி.முனியம்மாள், க.பெ.பழனிச்சாமி, 60, புதுக்கோட்டை மேடு, தாராபுரம் | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.15000 | ஏலம் கோர எவரும் வர வில்லை | ரூ.25001 | ஏலம் கோர எவரும் வர வில்லை |
| | | ஆர்.ராசாத்தி, க.பெ.ரத்தினம், 58, சோளக்கடை வீதி, தாராபுரம் | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.22000 | ஏலம் கோர எவரும் வர வில்லை | ரூ.30000 | ஏலம் கோர எவரும் வர வில்லை |
| | | மா.கார்த்திகேயன், த.பெ.மாரியப்பன், 122, புதுக்கோட்டை மேடு, தாராபுரம் | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம் கோர எவரும் வர வில்லை | ரூ.32000 | ஏலம் கோர எவரும் வர வில்லை |
| 44 | வார்டு எண்.24 அலங்கியம் ரோடு (பரியல் கிரவுண்டு) கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | கே.சித்ரா, த.பெ.காளி ரத்தினம், 52,ஜவகர் நகர், தாராபுரம். | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம் கோர எவரும் வர வில்லை | ரூ.28000 | ஏலம் கோர எவரும் வர வில்லை |
| | | திரு.பி.மோகன், 10,பாரதியார் தெரு, தாராபுரம் | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம் கோர எவரும் வர வில்லை | ரூ.30009 | ஏலம் கோர எவரும் வர வில்லை |
| 52 | வார்டு எண்.23, கிழக்கு பெரியார் தெரு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | திருமதி.ரஞ்சிதா, க.பெ.விஜயகாந்த், 47-14, பெரியார் மேற்கு தெரு, தாராபுரம் | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம்கோர எவரும் வர வில்லை | ரூ.10000 | ஏலம் கோர எவரும் வர வில்லை | ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வர வில்லை | ஏலம் கோர எவரும் வர வில்லை |

அலுவலகக்குறிப்பு:

1. குத்தகை இன எண்.8க்கு ஐந்து முறை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஆறாவது அழைப்பில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், எட்டாவது அழைப்பில் திரு.சதாசிவன் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ.20000/– ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இது சென்ற ஆண்டு குத்தகை தொகையை விட ரூ.9619 கூடுதலாக இருப்பதாலும், 01.04.2018 முதல் துறை மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.50/– சராசரியாக வசூல் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ள தொகையில் நாள் ஒன்றுக்கு ரூ.55/– உள்ளதாலும், மேலும் நகராட்சியில் பணியாளர் பற்றாக்குறையாக உள்ள காரணத்தாலும், துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகையை விட ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள தொகை கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் திரு.சதாசிவன், ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. குத்தகை இன எண்.12க்கு கடந்த 3 ஆண்டுகளாக, ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி எடுக்கவில்லை. நடப்பாண்டில் 2018–19 மூன்று முறை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வரவில்லை. நான்காவது முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திரு.சி.துரைசாமி என்பவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ.6500/–க்கு ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளார். தற்போது ஏழாவது முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் வரவில்லை. எனவே, வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.
3. குத்தகை இனஎண்.26க்கு ஆறாவது முறை ஒரு ஒப்பந்தப்புள்ளியும், ஏழாவது முறை மூன்று ஒப்பந்தபுள்ளிகளில் திரு.கார்த்திகேயன் ஆண்டு ஒன்றுக்கு ரூ.32000/–க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே, வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.
4. குத்தகை இனஎண்.44க்கு ஆறு முறை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஏழாவது முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திரு.பி.மோகன் ஆண்டு ஒன்றுக்கு ரூ.30009/–க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.
5. குத்தகை இனஎண்.52க்கு முதல் முறை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் கோர எவரும் கலந்து கொள்ளவில்லை. குத்தகை இனஎண்.52, ஏற்கனவே ஏலம் விடப்பட்ட குத்தகை இனஎண்.43க்கு அருகிலேயே இருப்பதாலும், பொதுமக்கள் கழிப்பறைக்கு செல்ல ஒரே பாதையாக இருப்பதாலும், மேற்கொண்டு ஏலம் போவதற்கு வாய்ப்பு குறைவு என்பதால், வரப்பெற்றுள்ள ஒரே ஒப்பந்தப்புள்ளி தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.10000க்கு முன்பு ஏலம் எடுத்த குத்தகைதாரர் திருமதி.ரஞ்சிதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

ந.க.எண்.5001/2017/அ3

**3.** தாராபுரம் நகராட்சியில் இரண்டு குடிநீர் திட்டஙகளின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகரில் மொத்தம் 8698 குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும், நகராட்சியில் மொத்தம் 16453 எண்ணிக்கையில் சொத்து வரி விதிப்புகள் உள்ளன. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை நகராட்சியில் உள்ள சொத்து வரி விதிப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 100 சதவீதம் இலக்கு நிர்ணயம் செய்து குடிநீர் இணைப்புகள் வழஙகப்பட வேண்டும் என தெரிவித்ததன் அடிப்படையில் சொத்து வரி விதிப்புகளின் எண்ணிக்கையில் தற்போது வழஙகியுள்ள 8698 போக மீதமுள்ள 7755 எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகளில் அனுமதியற்ற மனைப்பிரிவுகளில்

உள்ள வீடுகள் **1714** எண்ணிக்கை போக மீதமுள்ள **6041** எண்ணிகையிலான குடிநீர் இணைப்புகள் உடன் வழஙக வேண்டியுள்ளது.

மேலும், **6041** குடிநீர்இணைப்புகள் வழஙகத் தேவையான விரிவான திட்ட மதிப்பீடு ரூ.**445.00** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை முழுவதையும் அரசு மானியமாக பெற்று பணியினை செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**4.** தாராபுரம் நகராட்சியில் இரண்டு குடிநீர் திட்டஙகளின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சியில் மொத்தம் **16032** குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் **16453** எண்ணிக்கையிலான சொத்து வரி விதிப்புகளும், **8698** குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும், மீதமுள்ள **7755** சொத்து வரி விதிப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழஙக வேண்டி உள்ளது. இவற்றில் குடிசைப் பகுதியில் உள்ள வரி விதிப்புகளுக்கு இப்பகுதி மக்களால் முழுமையாக வைப்புத் தொகை செலுத்த இயலாத காரணத்தினால் வீட்டுக்குடிநீர் இணைப்புகளுக்கு மனுதாரர் செலுத்த வேண்டிய மொத்த வைப்புத் தொகை ரூ.**5000/–**ல் தவணை ஒன்றிக்கு ரூ.**1250/–** வீதம் மூன்று மாத இடைவெளியில் நான்கு தவணைகளாக மொத்த வைப்புத் தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**5. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கிழபுறம் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு இடைப்பட்ட பகுதியில்** 262' x 15' **அளவில் நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** 21.03.2018, 27.03.2018, 10.04.2018 **நகராட்சியில் மூன்று முறையாக பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொதுஏலம் விடப்பட்டதை எதிர்த்து வரி செலுத்துவோர் சங்கம் தலைவர் திரு.என்.பழனிச்சாமி, த.பெ.நாச்சிமுத்து கவுண்டர்,** 2/1, **அம்பாள்லாட்ஜ், பைபாஸ்ரோடு, தாராபுரம் என்பவர்** 28.03.2018 **அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில்** W.P.No.8497/2018 **நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் எதிர்வாதுரை தாக்கல் செய்து, நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காட சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் வசம் கோப்பு ஒப்படைப்பு செய்வதற்கும், அதற்கான செலவீனத்திற்கும் மன்றத்தின அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.** 5001/2017/அ3

**6.** தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட திருப்பூர் சாலை கடைஎண்.**3**ஐ திரு.நூர்முகமது என்பவர் **16.06.2014** அன்று தாராபுரம் நகராட்சியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகைக்கு ரூ.**12100/–**க்கு ஏலம் எடுத்தார். அரசாணை எண்.**92**, நாள்.**03.07.2007**ன்படி **9** ஆண்டுகள் நிறைவடையாததால் முன்னாள் கடைக்குத்தகைதாரர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால், மேற்படி கடையை ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்படாத நிலையில் **கடை ஒப்படைப்பு செய்யப்படுவதாக தெரிவித்து ஜீலை, ஆகஸ்ட்**

2014க்கு ஆகிய இரண்டு மாத வாடகை தொகை ரூ.24200/- வசூலிக்கப்பட்டுள்ளது கணினியில் பழைய குத்தகைதாரர்க்கு கேட்பு எழுப்பப்பட்டு, நாளது தேதி வரை வாடகை செலுத்தி வருகின்றார். எனவே, நகராட்சியின் மூலம் கடை ஒப்படைப்பு செய்யாத குத்தகைதாரர் திரு.நூர்முகமது என்பவரின் பெயரில் செலுத்திய வாடகை தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**ந.க.எண்.4451/2014/அ3**

**அலுவலகக்குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**7.** நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், சேலம் அவர்களின் **22.03.2018**ந் தேதிய ந.க.எண்.**673/2018**/சேம**3** மற்றும் ம.வ/ம(சே) எண்.**245/2018** என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி உடுமலை சாலையில் அமைந்துள்ள வார்டு எண்.**6**, பிளாக் எண்.**27**, நகரளவு எண்.**8** என்ற இடத்தில் புதிய வணிக உபயோக கட்டிடம் கட்ட திட்ட அனுமதியும் கட்டிடம் கட்ட இசைவும் அளித்துள்ளார்கள். இதில் சிறப்பு நிபந்தனை **5**இல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, உத்தேச திட்டச் சாலை விரிவாக்க இடத்தினை கட்டிட உரிமையாளர்கள் டாக்டர்.வி.கந்தவேள் மற்றும் கே.ஆர்.வித்யா ஆகியோர்கள் சார்பதிவாளர் ஆவண எண்.**1965/2018**, நாள்.**03/04/2018**இல் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.**2**இல் உத்தேசிக்கப்பட்ட சாலை விரிவாக்கப் பகுதியினை நகராட்சி ஆணையர் பெயரில் தான பத்திரம் மூலம் ஒப்படைத்து உள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – பதிவு செய்யலாம்
**ந.க.எண்.எப்1/4/2018**

**8.** தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி விதிக்கப்பட்டு, நகராட்சி மூலம் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதை பெற்றுக் கொண்டு கட்டிட உரிமையாளர்கள் கீழ்கண்ட வழக்கு எண்களின்படி நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். திரு.பி.ஸ்ரீநிவாஸ் வழக்கறிஞரிடம் கோப்பு ஒப்படைப்பு செய்து எதிர்வழக்காடவும் அதற்கான செலவீனத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண் | பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| 1. | W.P.No.5651/2018<br>W.M.P.No.6993/2018 | எஸ்.கோகுல்,<br>**239–2**, நாச்சிமுத்துப்புதூர் |
| 2. | W.P.No.4516 & 4526/2018<br><br>W.P.No.5557 & 5575 / 2018 | எஸ்.விஜயா,<br>**1/29**, காந்திபுரம் குறுக்குத் தெரு<br>டி.ஆறுமுகம்,<br>**1/29–1**, காந்திபுரம் குறுக்குத் தெரு |
| 3. | W.P.No.6906/ 2018<br>W.P.No. 8550 /2018 | ஷாஜஹான் |
| 4. | W.P.No.6812 / 2018<br>W.P.No.8434/2018 | ஜாகீர் உசேன் |

**அலுவலகக்குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

**9.** தாராபுரம் நகராட்சி வார்டு–**30** நேருநகர் சமுதாய கூடம் உட்பகுதியில் உள்ள பொதுக் கழிப்பிடத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து **2** குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார் பொருத்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பழுது காரணமாக பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே

மின்மோட்டாரை பழுது நீக்க பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.16000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இப்பணியை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M.சசிக்குமார் அவர்கள் வசம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்படைப்பு செய்து பணியினை முடிக்கலாம்.

10. தாராபுரம் நகராட்சி வார்டு—26 முத்துநகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலில் மழைநீர் வெறியேற வழிவகை இல்லாததால் மழைநீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகும் வாய்ப்பு உள்ளது. இதனை தடுக்கும் பொருட்டு மழைநீர் வடிகாலில் உறிஞ்சு குழி (Choke pit) அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே இப்பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.7500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்: 1464/2018/இ1**

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இப்பணியை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.A.சின்னசாமி அவர்கள் வசம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்படைப்பு செய்து பணியினை முடிக்கலாம்.

11. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி தாராபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு பிளிச்சிங பவுடர்க்கு பதிலாக திரவ குளோரின் இயந்திரம் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சியில் உள்ள 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளிலும் திரவ குளோரின் இயந்திரம் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பபட்டது. அதன் அடிப்படையில் கண்ணன் நகர் மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தி திரவ குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு(15)—ன் கீழ் கண்ணன் நகர் மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தும் பணிக்கு ரூ.717900—ஐ ஒப்பந்ததாரர் திருவாளர்.தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்டரீஸ், சென்னை அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

12. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி தாராபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு பிளிச்சிங பவுடர்க்கு பதிலாக திரவ குளோரின் இயந்திரம் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சியில் உள்ள 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளிலும் திரவ குளோரின் இயந்திரம் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பபட்டது. அதற்கு முன்பாக 12 மேல்நிலைத் தொட்டிகளிலும் திரவ குளோரின் பொருத்த அறை கட்ட வேண்டியது அவசியமாகிறது. அதன் அடிப்படையில் கோட்டை மேடு மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தும் அறை ஒன்று கட்ட

வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட பணியின் அவரசம் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு (15)–ன் கீழ் கோட்டை மேடு மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தும் அறை அமைத்தற்கு ரூ.225813/–ஐ ஒப்பந்ததாரர் திரு.எ.கணேசன் அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**13.** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி தாராபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு பிளிச்சிங பவுடர்க்கு பதிலாக திரவ குளோரின் இயந்திரம் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சியில் உள்ள 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளிலும் திரவ குளோரின் இயந்திரம் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பபட்டது. அதன் அடிப்படையில் கோட்டை மேடு மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தி திரவ குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு(15)–ன் கீழ் கோட்டை மேடு மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தும் பணிக்கு ரூ.717900–ஐ ஒப்பந்ததாரர் திருவாளர்.தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்டரீஸ், சென்னை அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**14.** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி தாராபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு பிளிச்சிங பவுடர்க்கு பதிலாக திரவ குளோரின் இயந்திரம் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சியில் உள்ள 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளிலும் திரவ குளோரின் இயந்திரம் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பபட்டது. அதன் அடிப்படையில் புதிய ஹவுசிங யூனிட் மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தி திரவ குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு(15)–ன் கீழ் புதிய ஹவுசிங யூனிட் மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தும் பணிக்கு ரூ.717900–ஐ ஒப்பந்ததாரர் திருவாளர்.தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்டரீஸ், சென்னை அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**15.** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி தாராபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு பிளிச்சிங பவுடர்க்கு பதிலாக திரவ குளோரின் இயந்திரம் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சியில் உள்ள 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளிலும் திரவ குளோரின் இயந்திரம் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பபட்டது. அதன் அடிப்படையில் மார்க்கெட் டேங்க் II மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தி திரவ குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது

அவசியமாகிறது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு(15)—ன் கீழ் மார்க்கெட் டேங்க் II மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தும் பணிக்கு ரூ.746180—ஐ ஒப்பந்ததாரர் திருவாளர்.தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்டரீஸ், சென்னை அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**16.** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி தாராபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு பிளிச்சிங பவுடர்க்கு பதிலாக திரவ குளோரின் இயந்திரம் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சியில் உள்ள 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளிலும் திரவ குளோரின் இயந்திரம் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பபட்டது. அதன் அடிப்படையில் மார்க்கெட் டேங்க் I மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தி திரவ குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு(15)—ன் கீழ் மார்க்கெட் டேங்க் I மேல்நிலைத் தொட்டியில் திரவ குளோரின் இயந்திரம் பொருத்தும் பணிக்கு ரூ.734360—ஐ ஒப்பந்ததாரர் திருவாளர்.தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்டரீஸ், சென்னை அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**17.** தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி 2017—18ன் கீழ் வார்டு எண் 21 முதல் 30 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிக்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எ.கணேசன்,<br>ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 0.21 % குறைவு |
| 2 | திருவாளர்.பழனிஆண்டவர் அன் கோ,<br>ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 2.75 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.21 % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எ.கணேசன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**18.** தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி 2017—18ன் கீழ் குடிநீர் உபயோகத்திற்கான (Sodium hypo chlorite) திரவ குளோரின் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு

தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | M/S.Sruthi Alum Industry<br>ஒப்பந்ததாரர், சென்னை. | மதிப்பீட்டு விலையை விட 3.57 % அதிகம் |
| 2 | M/S.Tamilnadu Chemicals Industries<br>ஒப்பந்ததாரர், சென்னை. | மதிப்பீட்டு விலையை விட 0.36 % குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.36 % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/S.Tamilnadu Chemicals Industries, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

19. தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி 2017–18ன் கீழ் வார்டு எண் 20 தளவாய்பட்டிணம் ரோடு வேம்பண கவுண்டர் லே–அவுட் மற்றும் அம்பேத்கார் தெரு பகுதியில் புதிய பைப் லைன், சுலிஸ் வால்வு, டம்மிகள் மற்றும் வார்டு எண் 25 உடுமலை ரோடு வேலவன் திருமண மண்டபம் வரை புதிய பைப் லைன் அமைக்கும் பணிக்கு ரூ.2.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எம்.சசிக்குமார்,<br>ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 0.38 % குறைவு |
| 2 | திரு.எம்.மாரிமுத்து,<br>ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 2.35 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.38 % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எம்.சசிக்குமார், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

20. தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி 2017–18ன் கீழ் வார்டு எண் 11 முதல் 20 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிக்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எம்.மாரிமுத்து, ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 0.08 % குறைவு |
| 2 | திரு.வெஙகிடுசாமி, ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 2.09 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08 % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எம்.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

21. தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி 2017–18ன் கீழ் வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிக்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எ.கணேசன், ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 0.21 % குறைவு |
| 2 | திருவாளர்.பழனிஆண்டவர் அன் கோ, ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 2.63 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.21 % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எ.கணேசன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

22. தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இறந்துவிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு ஈமச்சடங்கு தொகையாக ரூ.2500/– அரசால் வழங்கப்படுகிறது. மேற்படி ஈமக்கிரியை தொகை கேட்டு விண்ணப்பிக்கும் மனுதாரர்கள் மிகவும் வசதி குறைவாக இருப்பதால் உடனுக்குடன் ஈமக்கிரியை தொகை வழங்க வேண்டும். இதற்காக அரசால் ஒதுக்கப்படும் ஈமக்கிரியை மான்ய தொகை உரிய காலத்தில் வரப்பெறாததால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக வேண்டியுள்ளது. எனவே, மேற்படி ஈமக்கிரியை தொகையை பொது நிதியிலிந்து வழங்கவும் அதன் பிறகு அரசால் வரப்பெறும்

ஈமக்கிரியை மான்ய தொகையில் இருந்து சரிசெய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.2218/2014/எச்1**

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

23. தாராபுரம் நகராட்சி வார்டு–3 வடக்குத் தெருவில் சிறுபாலம் கட்டும் பணிக்கு 03.04.2018 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் விபரம் பின்வருமாறு

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலை விகிதம்** |
|---|---|---|
| 1 | திரு.R.தஙகராஜ் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |

மேற்படி, பணிக்கு வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.03% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.R.தஙகராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:4716/ 2018/இ1**

**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்

24. தாராபுரம் நகராட்சி பொறியியல், பொதுப்பிரிவு மற்றும் கணினி பிரிவில் உள்ள UPS பயன்பாட்டிற்கு புதிய பேட்டரிகள் வாஙகும் பணிக்கு 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலை விகிதம்** |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.என்கான் என்ஜினியர்ஸ் | மதிப்பீட்டை விட 0.27% குறைவு |
| 2 | திரு.R.நாகராஜ் | மதிப்பீட்டை விட 0.54% அதிகம் |

மேற்படி, பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.27% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள். என்கான் என்ஜினியர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:1462/ 2018/இ1**

**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்

**25.** தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 அம்பேத்கார் தெரு பகுதியில் உள்ள பொதுக் கழிப்பிடத்திற்கு ஆழ்துளை மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு(15)–ன் கீழ் வார்டு எண் 20 அம்பேத்கார் தெரு பகுதியில் மின்மோட்டார் பொருத்தி

தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு ரூ.70466/—ஐ ஒப்பந்ததாரர் திரு. எம்.சசிக்குமார், அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**26.** தாராபுரம் அரசு மருத்துவமனையில் **13.04.2013** அன்று பிறந்த ஆண் குழந்தையை இதன் பெற்றோர்களால் உறவினர்களுக்கு தத்து கொடுக்கப்பட்டு குழந்தையை தத்தெடுத்த தந்தையின் பெயர், தாயின் பெயர் மற்றும் குழந்தையின் பெயரை மாற்றம் செய்ய வேண்டி திரு.T.H. கண்ணன் மற்றும் T.K. சுமதி என்பவர்களால் முதன்மை மாவட்ட முனிசிப் கோர்ட், மதுரையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கு எண் OS NO **67/2018** ல் ஆஜராகுமாறு சம்மன் வரப்பட்டது.

இவ்வழக்கு சம்பந்தமாக, தாராபுரம் நகராட்சி வழக்கறிஞர் திரு.முருகசாமி அவர்களை கலந்தாலோசித்த போது அவர் இவ்வழக்கில் ஆஜராக இயலாத காரணத்தால் மதுரை கோர்ட்டில் உள்ள மதுரை மாநகராட்சி வழக்கறிஞர் திரு.கே.எஸ்.சிவக்குமார் வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்துமாறு கூறினார்.

எனவே இவ்வழக்கிற்கு (வழக்கு எண் OS NO **67/2018**) திரு.கே.எஸ்.சிவக்குமார் வழக்கறிஞர் மதுரை அவர்களை, தாராபுரம் நகராட்சி சார்பில் வழக்காடவும், வழக்கு சம்மந்தமாக ஆகும் செலவீனத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு -** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.859/2018/எச்1**

**27.** தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் பதிக்க தோண்டப்பட்ட சாலைகள் மற்றும் இயற்கை இடையூறுகளால் சேதமடைந்த சாலைகளில், மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டு, தார் சாலைகள் புதுப்பிக்க முன்னுரிமை அளித்து, தயார் செய்யப்பட்ட, பின்வரும் மதிப்பீடுகளுக்கு **2018—19**ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்திட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைக்க நகர மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு<br>ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | அண்ணா நகர் மெயின் சாலை மற்றும் குறுக்கு தெரு, நாச்சிமுத்துப்புதூர் குறுக்கு தெரு, பொள்ளாச்சி ரோடு குறுக்கு தெரு, தேவேந்திரா தெரு, குளத்துப்புஞ்சை ரோடு, கண்ணன் நகர், எஸ்.எஸ்.எச்.எம் நகர், எல்.ஜி.ஜி.எஸ் காலனி, பெரியார் கிழக்கு தெரு மற்றும் மார்க்கெட் ரோடு ஆகியவற்றில் தார் சாலை திடப்படுத்துதல், அகலப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணி. | 200.00 |
| | **மொத்தம்** | **200.00** |

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) மேற்கண்ட மதிப்பீட்டிற்கு அரசு நிதி ஒதுக்கீடு போக மீதமுள்ள தொகையினை, நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**28.** தாராபுரம் நகராட்சியில் பழுதடைந்த **20** எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் (Dumper Placer Bins) பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ரூ.**7.25** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு **27.04.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | M/S. V.S.M Engineering, Coimbatore | மதிப்பீட்டு விலையை விட **0.63**% அதிகம் |
| 2 | M/S. Lakshmi Agencies, Coimbatore | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/S. Lakshmi Agencies, Coimbatore அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**29.** தாராபுரம் நகராட்சி சந்தைபேட்டை வளாகத்தில் உள்ள மீன்சந்தை கட்டடத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் பணிகள் ETP சம்ப் கட்டுதல் பணி, ஆழ்குழாய் கிணறு அமைத்தல் பணி, மேல்தளம் தட்டு ஓடு அமைத்தல் பணி, தனித்தனி கடைக்கும் ரோலிங் சட்டர் அமைத்தல் பணி ஆகிய பணிக்கு பொதுநிதி **2018–19**ன் கீழ் ரூ.**18.50.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு **23.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.அக்சயா அசோசியேட்ஸ், ஒப்பந்ததாரர், சேலம். | மதிப்பீட்டை விட **9**.82% அதிகம் |
| 2 | திருவாளர்கள்.எம்.முருகேசன் அன்கோ, ஒப்பந்ததாரர், ஈரோடு | மதிப்பீட்டை விட 3.49% அதிகம் |

மதிப்பீட்டை விட கூடுதலான விலைவிகிதத்தில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் மதிப்பீட்டை விட **3.49**% அதிகம் என்ற அளவில் திருவாளர் எம்.முருகேசன் அன்கோ, ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். இப்பணிக்கான மதிப்பீடு **2017–18**ம் ஆண்டு பொதுப்பணித் துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையின் படி தயார் செய்யப்பட்டதாகும். மேற்கானும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **3.49**% அதிகம் என்ற நிலையில் உள்ளது. எனவே, நகராட்சி பொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விதிகளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தைவிட கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள

இயலாத நிலை காரணமாக கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.எம்.முருகேசன் அன்கோ, அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.**6344/2015/இ1** நாள்.**28.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துத்தரக் கோரி விலைக்குறைப்பு கடிதம் (Negotiation Letter) வழஙகப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.**05.04.2018**ல் மணல், கம்பி, சிமெண்ட், மற்றும் பணியாளர்களின் கூலி ஏற்றம் காரணமாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துதர இயலாது என குறிப்பிட்டுள்ளார்.

எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெற வாய்ப்பு இல்லை என்பதாலும் பொதுமக்கள் நலன் கருதியும் திருவாளர்கள்.எம்.முருகேசன் அன்கோ, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்: **6344/2015/இ1**

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்ததாரர் கோரியுள்ள மதிப்பீட்டைவிட 3.49% (ரூ.**1653390.00)** கூடுதலாக பெற்ற விலை விகிதத்திற்கு மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**30.** தாராபுரம் நகராட்சி அம்மா உணவகத்திற்கு புதிதாக ஸ்டீம் பாய்லர் விநியோம் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.**0.90** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு **23.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலை விகிதம்** |
|---|---|---|
| 1 | திரு.R.நாகராஜன், ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டை விட 18.12% அதிகம் |
| 2 | திரு.A.சின்னசாமி, ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டை விட 4.90% அதிகம் |

மதிப்பீட்டை விட கூடுதலான விலைவிகிதத்தில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் **4.90%** மதிப்பீட்டை விட கூடுதல் என்ற அளவில் திரு.A.சின்னசாமி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். எனவே, நகராட்சி பொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விதிகளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தை விட கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள இயலாத நிலை காரணமாக கூடுதல் விலைவிகிதத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.A.சின்னசாமி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.**858/2018/இ1** நாள்.**27.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துத்தரக் கோரி விலைக்குறைப்பு கடிதம் (Negotiation Letter) வழஙகப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.**05.04.2018**ல் ஸ்டீம் பாய்லர் பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி ஏற்றம் காரணமாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துதர இயலாது என குறிப்பிட்டுள்ளார்.

எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெற வாய்ப்பு இல்லை என்பதாலும் பொதுமக்கள் நலன் கருதியும் திரு.A.சின்னசாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்: **858/2018/இ1**

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட திரு.A.சின்னசாமி, ஒப்பந்ததாரர் அவர்கள் கோரியுள்ள மதிப்பீட்டைவிட 4.90% (ரூ.78150.00) கூடுதலாக பெற்ற விலை விகிதத்திற்கு மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**31.** தாராபுரம் நகராட்சி சந்தைபேட்டை வளாகத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM-SUH) கீழ் **23** நபர்கள் தங்கும் வகையில் வீடற்றவர்களுக்கு தஙகும் விடுதி கட்டும் பணிக்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் **2017–18**ன் கீழ் ரூ.**28.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு **20.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.என்கான் என்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் | மதிப்பீட்டை விட 15.49% அதிகம் |
| 2 | திரு.R.நாகராஜன் | மதிப்பீட்டை விட 4.90% அதிகம் |

மதிப்பீட்டை விட கூடுதலான விலைவிகிதத்தில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் **4.90%** மதிப்பீட்டை விட கூடுதல் என்ற அளவில் திரு.R.நாகராஜன், ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். இப்பணிக்கான மதிப்பீடு **2017–18**ம் ஆண்டு பொதுப்பணித் துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையின் படி தயார் செய்யப்பட்டதாகும். மேற்கானும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **4.90%** அதிகம் என்ற நிலையில் உள்ளது. எனவே, நகராட்சி பொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விதிகளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தைவிட கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள இயலாத நிலை காரணமாக கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.R.நாகராஜன், அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.**1881/2016/**இ**1** நாள்.**27.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துத்தரக் கோரி விலைக்குறைப்பு கடிதம் (Negotiation Letter) வழஙகப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.**05.04.2018**ல் மணல், கம்பி, சிமெண்ட், மற்றும் பணியாளர்களின் கூலி ஏற்றம் காரணமாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துதர இயலாது என குறிப்பிட்டுள்ளார்.

எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெற வாய்ப்பு இல்லை என்பதாலும் பொதுமக்கள் நலன் கருதியும் திரு.R.நாகராஜன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்:**1881/2016/**இ**1**

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்ததாரர் கோரியுள்ள மதிப்பீட்டைவிட 4.90% (ரூ.**2584071.50**) கூடுதலாக பெற்ற விலை விகிதத்திற்கு மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**32.**தாராபுரம் நகராட்சி சந்தைபேட்டை வளாகத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NULM) கீழ் அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளிகளின் உதவியாளர் **40** நபர்கள் தஙகும் வகையில் சிறப்பு தஙகும் விடுதி கட்டும் பணிக்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் **2017–18**ன் கீழ் ரூ.**26.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு **20.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.என்கான் என்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் | மதிப்பீட்டை விட 13.89% அதிகம் |
| 2 | திரு.R.நாகராஜன் | மதிப்பீட்டை விட 4.90% அதிகம் |

மதிப்பீட்டை விட கூடுதலான விலைவிகிதத்தில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் 4.90% மதிப்பீட்டை விட கூடுதல் என்ற அளவில் திரு.R.நாகராஜன், ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். இப்பணிக்கான மதிப்பீடு 2017–18ம் ஆண்டு பொதுப்பணித் துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையின் படி தயார் செய்யப்பட்டதாகும். மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.90% அதிகம் என்ற நிலையில் உள்ளது. எனவே, நகராட்சி பொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விதிகளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தைவிட கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள இயலாத நிலை காரணமாக கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.R.நாகராஜன், அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1881/2016/இ1 நாள்.27.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துத்தரக் கோரி விலைக்குறைப்பு கடிதம் (Negotiation Letter) வழஙகப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.05.04.2018ல் மணல், கம்பி, சிமெண்ட், மற்றும் பணியாளர்களின் கூலி ஏற்றம் காரணமாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துதர இயலாது என குறிப்பிட்டுள்ளார்.

எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெற வாய்ப்பு இல்லை என்பதாலும் பொதுமக்கள் நலன் கருதியும் திரு.R.நாகராஜன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்:1881/2016/இ1

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்ததாரர் கோரியுள்ள மதிப்பீட்டைவிட 4.90% (ரூ.2397610.00) கூடுதலாக பெற்ற விலை விகிதத்திற்கு மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

33. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை கடைஎண்.21ஐ, திருமதி.சரஸ்வதி என்பவர் ஏலத்தில் எடுத்து நடத்தி வந்தார். மேற்படி கடைக்கு 2015–16ஆம் ஆண்டு முதல் இன்று வரை வாடகை தொகை ரூ.50233/–ஐ செலுத்தாமல் நிலுவை வைத்துள்ள காரணத்தினால், நகராட்சியின் மூலம் அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில் நிலுவைத் தொகை செலுத்தவில்லை. எனவே, நகராட்சியின் மூலம் கடையை பூட்டி சீல் வைக்கப்பட்டது. அன்னார் இந்நகராட்சியில் செலுத்தியுள்ள வைப்புத் தொகையினை ஈடு செய்து கொள்ளவும், மீதமுள்ள நிலுவைத் தொகைக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வசூல் செய்யவும், மேற்படி கடையை பொதுஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:4451/2013/அ3**

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

ஆணையர் மற்றும்
தனிஅலுவலர்
தாராபுரம் நகராட்சி

**நிகழும் திருவள்ளுவராண்டு விளம்பி வருடம் 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் தேதி சித்திரை மாதம் 10ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள தாராபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

----

1. தாராபுரம் உள்ளூர் திட்டக் குழும எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே 15 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் உத்தேசிக்கப்பட்டு அவற்றில் விரிவு அபிவிருத்தி திட்டம் 2, 5 மற்றும் 6 ஆகிய மூன்று திட்டங்கள் மட்டும் நகர் ஊரமைப்பு ஆணையர் ஒப்புதலளிக்கப்பட்டது. மேற்கண்ட மூன்று திட்டஙகளும் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இதர 12 திட்டங்களில் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3,7,8 மற்றும் 10 ஆகிய திட்டங்கள் இணக்கம் பெறப்பட்டு ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அத்துடன் வரைவு நிலையிலுள்ள விரிவு அபிவிருத்தி திட்டம் எண்கள்.1,4,9,11,12,13,14 மற்றும் 15 ஆகிய திட்டங்களும் தொடர் நடவடிக்கையின்றி நிலுவையில் உள்ளது. இத்திட்டஙகளும் ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு மேலாக வரைவு நிலையிலேயே உள்ளது.

மேற்கண்டவாறு விரிவு அபிவிருத்தி திட்டங்களின் நிலை உள்ளது. இவற்றில் ஒப்புதலளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்கள். 2,5 மற்றும் 6 திட்டங்கள் ஒப்புதலளித்து 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதால் அத்திட்டங்களையும் அத்துடன் இதர 12 திட்டங்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கையின்றி உள்ளதால் இத்திட்டத்தில் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7,9,10 மற்றும் 14 ஆகிய திட்டங்களை மட்டும் தற்போதைய அபிவிருத்தியினைக் கருத்தில் கொண்டு புதிய விரிவு அபிவிருத்தி திட்டம் தயார் செய்து தொடர் நடவடிக்கை எடுக்கவும். இதர திட்டஙகள் அனைத்தும் பெருமளவில் வளர்ச்சியடைந்த பகுதியாக உருவாகியுள்ளதால் அத்திட்டத்தினை கைவிடவும், ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தின் நில உபயோக பயன்பாட்டின்படி மட்டும் பயன்படுத்திடவும், ஏற்கனவே **மறு ஆய்வு செய்யப்பட்ட முழுமைத் திட்டத்தினை ஒப்புதல் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசைக் கேட்டுக்கொள்ள மற்றும்** நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் இசைவினைப் பெறவும் உள்ளூர் திட்டக் குழுமத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – உள்ளூர் திட்ட குழுமம் ஒப்புதல் அளிக்கலாம்

உறுப்பினர் செயலர் / ஆணையர்
உள்ளூர் திட்டக் குழுமம்
தாராபுரம்